# முரண்பாட்டு அறிக்கையிடல்

## என்றால் என்ன ? அது எவ்வாறு ?



சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனம் IFJ

மோதல்கள் நடைபெறும் காலப் பகுதிகளில் பத்திரிகையாளர்கள் ஒழுக்க கோவைகளை பின் பற்றி உண்மையை வெளிப்படுத்துவது மிக முக்கியமானதாகின்றது. தங்களை பாதிக்கும் முடிவுகளை புரிந்து கொள்ளவும் அவை குறித்து முடிவுகளை எடுப்பதற்குமான தகவல்களை சமூகத்திற்கு வழங்குவதற்கும் இது உதவும்.

பல்லின சமூகமொன்றில் இந்த விடயங்கள் குறித்து தவறான விதத்தில் செய்திகளை வெளியிடுவது பதற்ற நிலையை மேலும் அதிகரிப்பதற்கே உதவும்.

இதன் காரணமாக பத்திரிகையாளர்கள் குறிப்பிட்ட ஒரு தரப்பையோ அல்லது மற்றைய தரப்பையோ உற்சாகப்படுத்துவதை தவிர்க்க வேண்டும். மாறாக மக்களுக்கு ஏனைய சமூகங்கள் குறித்து தெளிவுபடுத்த முயல வேண்டும். கலாசார, மத, இன வேறுபாடுகள் குறித்து தெளிவுபடுத்த வேண்டும். அந்த சமூகங்கள் குறித்த புரிந்துணர்வுடன் செய்திகளை வழங்க வேண்டும்.

இதற்கு மேலோட்டமாக பார்க்காமல் ஆழமாக அலசுவது அவசியம். தகவல்களை பெறுவதற்கான புதிய வழிமுறைகளை, புதிய எண்ணக்கருக்களை, புதிய வாய்ப்புக்களையும் கண்டு பிடிக்க வேண்டும்.

சகிப்புத் தன்மையை வளர்ப்பதற்கும், பதற்றத்திற்கும் முடிவு கட்டுவதற்கும்தேவையான புதிய ஆதாரங்களை தேடுதல், புதிய கருத்துக்கள் மற்றும் புதிய சந்தர்ப்பங்கள் தொடர்பாக தேடிப்பார்ப்பதற்கு அவகாசம் கிடைத்தலாகும்.

## முதல் தர வரிசையில் தகவல்களை பெற்றுக் கொள்ளல்

ஊடகத்தின் சிறப்புத் தன்மையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமாயின் செய்தியறைக்கு அப்பால் முதல் தர தகவல்கள், ஆதாரங்களை கட்டியெழுப்பிக் கொள்ளல் வேண்டும்.

அரசாங்கம் வெளியிடும் செய்திக் குறிப்புகளில் காணப்படும் அரசாங்க செய்திகளையும் விட இந்த செய்தி மூலங்கள் சாதாரண மக்களின் வாழ்க்கை, அவர்களது அச்சம், நம்பிக்கை, வெற்றிகள், பேரழிவு போன்றவற்றை உண்மையாக சொல்லக் கூடும்.

மருத்துவர்கள் சட்டத்தரணிகள் கல்விமான்கள், சமூகத் தலைவர்கள் இதற்கு அப்பால் நாங்கள் வீதியில் சந்திக்கும் சாதாரண மனிதர்கள் ஒரு வழமையான செய்தியின் மாறுபட்ட கோணத்தினை தெரிவிப்பதற்கு, தெரிந்து கொள்வதற்கு உதவியாக அமைவார்கள்.

பல வகையான செய்தி மூலங்களை (Sources) கொண்டிருப்பது ஒரு தகவலை அது சரியானதா என உறுதிப்படுத்துவதற்கு உதவும். மிகவும் நம்பிக்கைக்குரிய செய்தி மூலங்களே எப்போதும் விரும்பத்தக்கவை. ஊடகங்களை அடிப்படையாக கொண்ட இரண்டாந்தர செய்தி மூலங்களினால் பிழையான செய்திகள் உருவாகலாம்.

இதனை விட பல்லின சமூகமொன்றை சேர்ந்த பத்திரிகையாளனிற்கு சகல சமூகங்களிலுமிருந்து நம்பிக்கையான செய்தி மூலங்கள் இருத்தல் அவசியம்.

மேலும் பல்வேறு வகைப்பட்ட விடயங்களை நேர்மையாகவும், சமநிலையோடும் வெளியிடுவதன் மூலம் மக்கள் தமது வாழ்க்கை குறித்து சாதகமான கட்டமைப்பை உருவாக்க உதவலாம்.

## சுய கட்டுப்பாடும், ஒழுக்க கோவைகளும் ஏன் அவசியம்?

தொழில்சார் ஒழுக்க கோவைகளுக்கு மாறாக செயற்படுமாறு பத்திரிகையாளர்களை அவர்களது உத்தியோகத்தர்கள் வற்புறுத்தலாம்.

அவர்களது செய்திகளில் உண்மை திரிபுபடுத்தப்படும் விதத்தில் மாற்றங்கள் செய்யப்படலாம்.

ஆகவே, இப்படிச் செய், இப்படிச் செய்யாதே என்ற சில விடயங்களை பின்பற்றுவதிலும் பார்க்க, ஒழுக்க நெறி சார்ந்த விடயங்கள் குறித்த சிந்தனை கட்டமைப்பை உருவாக்குவதே சிறந்தது. இதன் காரணமாக பத்திரிகையாளர்கள் தாங்கள் எதிர்கொள்ளும் சவால்களை துணிச்சலுடன் அணுகலாம்.

### மோதல் சூழ்நிலைகளில் செயற்படுவதற்கு ஏன் நெறிமுறைகள் அவசியம் ?

- பத்திரிகையாளர்கள் சுதந்திரமாக செயற்படுபவர்கள் என்பதால்
- செய்தி நிறுவனங்களிலிருந்தும் வெளியிலிருந்தும் வரும் அழுத்தங்களையும், செல்வாக்கினையும் தவிர்ப்பதற்கு
- பத்திரிகையாளர்கள் தங்களுடைய செயற்பாடுகள் குறித்து தங்களது அலுவலகத்திலும், சமூகத்திலும் வாதாடுவதற்காக, அதனை நியாயப்படுத்துவதற்காக.
- ஒழுக்க நெறி சார்ந்த பிரச்சினைகளுக்கும் குழப்பங்களுக்கும் தீர்வு காண உதவுவதற்கு

## தீர்வு :

இலங்கையில் ஊடகங்களின் பங்களிப்பை, அதன் முக்கியத்துவத்தை தாங்கள் உணர்ந்து கொண்டதாக செய்தியாளர்கள் கருதினாலும் நீதியான முறையில் செயற்படுவதற்கான வளங்கள் இல்லை என கருதுகின்றனர்.

- ஒழுக்க கோவையொன்று உருவாக்கப்பட்டு அவை ஊடக நிறுவனங்களால் அமுல்படுத்தப்படுவதை அவர்கள் விரும்புகின்றனர். இதனை சகல பத்திரிகையாளர்களும் பின்பற்ற வேண்டுமெனவும், இதன் மூலம் மோதல் தீர்விற்கு ஊடகங்கள் வழமையான பங்களிப்பை வழங்கலாம் எனவும் அவர்கள் கருதுகின்றனர்.
- இன மோதல் குறித்து புரிந்து கொண்டு செய்தி வெளியிடுவதற்கு பயிற்சி அவசியம் என்ற கருத்து காணப்படுகின்றது.
- இன மோதல் தொடர்பான செய்திகளை வெளியிடும் போது கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளை வகுப்பதும் செய்தியறையில், பல்வேறு கருத்துக்களுக்கு இடமளிப்பதும், ஆசிரிய பீடம் சுதந்திரமாக செயற்படுவதற்கு உற்சாகமளிப்பதும் பக்கச்சார்பற்ற, சரியான செய்தி வெளியிடுதலிற்கு அவசியம் என்ற கருத்து காணப்படுகின்றது.
- இன, மத, மோதல்கள் தொடர்பான செய்திகளிலேயே இதனை அதிகம் காண முடிகின்றது. இன மோதல் குறித்த செய்திகளை வெளியிடும் போது உணர்வுகளை கட்டியெழுப்பும் தலையங்கங்கள் தீட்டப்படுவதை அவதானிக்க முடிகின்றது. இதுவே இன்னமும் சவாலாக உள்ளது.

## தகவலில் சரியான தன்மை :

- நம்பிக்கைத்தன்மை வாய்ந்த, பல்வேறுபட்ட செய்தி மூலங்களை உருவாக்குங்கள்.
- சகல தகவல்களையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள், குறிப்பிட்ட அடையாளங்களை அடிப்படையாக வைத்து எந்த அறிக்கைகளையும் ஏற்றுக் கொள்ளாதீர்கள். சில வேளை உத்தியோகபூர்வ செய்திகள் கூட பிழையாக அமையலாம்.
- உங்களுக்கு கிடைக்கும் தகவலின் தரம் எவ்வளவு தூரம் உண்மையானது என்பதை உறுதி செய்யுங்கள்.
- செய்தியறையில் கலாசார மற்றும் மொழி ரீதியான பன்முகத்தன்மையை ஊக்குவியுங்கள். மொழித் தடையை அகற்றுவதற்கும் பல்வேறுபட்ட செய்தி மூலகங்களை கொண்டிருப்பதற்கும் இது உதவும்.
- பிழைகளை ஏற்றுக் கொண்டு, உடனடியாக திருத்துங்கள்.

## சமநிலை

- மோதல் சூழ்நிலையில் தொடர்புபட்டுள்ள சகல தரப்பினது கருத்துக்களையும் பரிசீலனை செய்யுங்கள், ஏற்றுக் கொள்ளுங்கள்.
- முடிந்தவரை மிகவும் நம்பிக்கைக்குரிய செய்தி மூலங்களை பயன்படுத்துங்கள். சாதாரண மக்களின் வாழ்க்கை குறித்த உண்மையை அறிய இது உதவும்.
- அரசாங்க தகவல்கள் மற்றும் புள்ளி விபரங்களுக்கு அப்பால் சிந்தியுங்கள். ஒரு செய்தியில் மனிதாபிமான பக்கம் மக்களின் கவனத்தை ஈர்த்து, அவர்களை செயற்பட தூண்டும்.

## உணர்ச்சிபூர்வம் :

- இனம், மதம், மொழி போன்றவற்றை குறிப்பிடுவது கட்டுப்படுத்தலாம்.
- உங்களிடம் உள்ள பக்கச்சார்பு குறித்து தெரிந்திருங்கள்.
- வெளிவந்த செய்தி குறித்த மக்களின் உணர்வுகளை பரிசீலியுங்கள்.
- வார்த்தைகளை பயன்படுத்தினால் குழப்பம் ஏற்படலாம் என கருதும் இடங்களில் உருவப்படங்களை பயன்படுத்துங்கள்.

## சூழல் :

- மக்கள் விவகாரங்களை புரிந்து கொள்ளவும் குழப்பநிலை ஏற்படுவதை தவிர்க்கவும் சூழ்நிலைகள் உதவக் கூடும்.
- வரலாற்று சூழ்நிலை அடிப்படையில் விடயங்களை முன் வைப்பது, தற்போதைய சூழ்நிலையை விளங்கிக் கொள்ளவும், குறிப்பிட்ட விடயம் குறித்து தீர்க்கமான நிலைப்பாட்டை எடுக்கவும், மாற்றத்திற்கு உதவக் கூடும்.
- மூன்றாவது தரப்பையோ, அல்லது ஊடகங்களையோ அடிப்படையாக வைத்து எழுதுவதை விட சம்பந்தப்பட்ட மக்களின் அனுபவங்களை மையப்படுத்துங்கள்.

## கடமையுணர்வு :

- வாசகர்களுக்கான கடமையுணர்வு மூலமும், நடுநிலைமை மூலமும் ஊடகங்கள் ஸ்திரமான சமூக நிலைமையை உருவாக்கலாம்.
- மோதல் சூழ்நிலைகளில் பொறுப்பாக செயற்படா விட்டால் பதற்றம் அதிகரிக்கும். அரசாங்கம் இதனை பயன்படுத்தும் வாய்ப்பும் உள்ளது.
- அறிக்கைகள், தலையங்கங்கள், படங்கள், மக்களை குறிப்பாக சிறுபான்மை சமூகங்களை எவ்வாறு பாதிக்கும் என்பதை கருதுங்கள்.

# சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனத்தின் தொழில்சார் ஒழுக்க நெறிக் கோவை

நிகழ்வுகளை விபரிக்கும் போது செய்தியையும் தகவலையும் சேகரித்தல், பரிமாற்றுதல், பரப்புதல், கருத்துத் தெரிவித்தலில் ஈடுபட்டுள்ள பத்திரிகையாளர்களுக்கான தொழில்சார் நடத்தையின் நியமமாக இந்தச் சர்வதேசப் பிரகடனம் வெளிப்படுத்தப்படுகின்றது.

1. உண்மைக்கு, மரியதை மற்றும் உண்மைக்கான பொது மக்களின் உரிமை ஆகியவையே பத்திரிகையாளரின் முதற் கடமையாகும்.

2. இக் கடமைகளை நிறைவேற்றுகையில், அனைத்து சந்தர்ப்பங்களிலும் பத்திரிகையாளர்கள் செய்திகளை நேர்மையாகச் சேகரித்தல் மற்றும் பிரசுரித்தலிலுள்ள சுதந்திரத்தின் கோட்பாடுகளையும், நியாயமான கருத்துக்கள் மற்றும் விமர்சனங்களின் உரிமையையும் பாதுகாப்பர்.

3. பத்திரிகையாளர் தனக்கு மூலம் தெரிந்த உண்மைகளுக்கு ஏற்ப மாத்திரமே அறிக்கையிடுவார். பத்திரிகையாளர் அத்தியாவசியமான தகவல்களை வெளியிடாது மறைத்து வைக்கவோ அல்லது ஆவணங்களை தவறாகத் திரித்து அமைக்கவோ மாட்டார்.

4. பத்திரிகையாளர் செய்திகளையும், புகைப்படங்களையும் மற்றும் ஆவணங்களையும் பெற்றுக் கொள்ள நியாயமான முறைகளை மட்டுமே பயன்படுத்துவார்.

5. புண்படுத்தும் வகையில் பிரசுரிக்கப்பட்ட ஏதாவது தகவல் திருத்தமற்றது எனக் கண்டு பிடிக்கப்பட்டால் அதைச் சீர் செய்வதற்கு பத்திரிகையாளர் தன்னால் அதிகபட்சம் இயன்றதைச் செய்வார்.

6. மறைவாகப் பெறப்பட்ட தகவல் மூலம் தொடர்பாகப் பத்திரிகையாளர் தொழில்சார் இரகசியத் தன்மையைப் பேணுவார்.

7. ஊடகத்தினால் ஊட்டி வளர்க்கப்படும் பாகுபாட்டின் அபாயத்தினைப் பற்றிப் பத்திரிகையாளர் அறிந்தவராக இருப்பார். ஏனைய விடயங்களுக்கு மத்தியிலே இனம், பால், பாலியல், மொழி, சமயம் அரசியல் அல்லது ஏனைய கருத்துக்கள் மற்றும் தேசிய அல்லது சமூக மூலங்களின் அடிப்படையிலமைந்த அவ்வாறான பாகுபாட்டிற்கு துணை தந்து ஊக்குவிப்பதைத் தவிர்ப்பதற்கு அவர் தன்னால் அதிகபட்சம் இயன்றதைச் செய்வார்.

8. பத்திரிகையாளர் பின்வரும் கருத்துத் திருட்டுக்களை மோசமான தொழில்சார் குற்றங்களாகக் கருதுவார். கெடு நோக்கான தவறான பிரதிநிதித்துவம், அவதூறு, பெயரைக் கறைப்படுத்தல், எழுத்து மூலமான குற்றத்தாக்கு, கண்டறியப்படாத குற்றச் சாட்டுக்கள், பிரசுரிப்பதற்கு அல்லது பிரசுரிக்காமல் மறைப்பதற்கு எந்த வடிவத்திலும் ஏற்றுக் கொள்ளப்படும் இலஞ்சம்.

9. பத்திரிகையாளர் எனும் பெயருக்குத் தகுதியானவர்கள் மேலே குறிப்பிடப்பட்ட கோட்பாடுகளை விசுவாசமாகப் பேணுவது தமது கடமை எனக் கருதுவர். ஒவ்வொரு நாட்டினதும் பொதுச் சட்டங்களினுள்ளே பத்திரிகையாளர்கள் தொழில்சார் விடயங்களிலே தமது சகபாடிகளின் விசாரணை அதிகாரத்தினை மட்டுமே கருத்திற் கொள்வார்கள். அரசாங்கத்தினது அல்லது ஏனையவர்களினது ஒவ்வொரு வகைத் தலையீடும் இதில் விளக்கப்படும்.

*(IFJ ன் 1954 உலக காங்கிரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. 1986 உலக காங்கிரசினால் திருத்தப்பட்டது.)*

# இலங்கை பத்திரிகையாளர்கள் என்ன நினைக்கின்றனர் ?

பத்திரிகையாளர்கள் பணிபுரியும் விதத்தில் முன்னேற்றத்தினை ஏற்படுத்துவதற்கான நெறிமுறைகளை உருவாக்கும் நோக்கத்துடன் I.F.J. அமைப்பு இலங்கையின் 100 இற்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்களை அவர்களது அபிப்பிராயங்கள், அனுபவங்கள் தொடர்பாக பேட்டி கண்டது.

ஊடகங்களை கண்காணிக்கும் இரண்டு நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்பட்டன. மோதல்களை ஊடகங்கள் எவ்வாறு கையாண்டன என்பது குறித்தும் சுனாமிக்கு பின்னர் அவை எவ்வாறு செயற்பட்டன என்பது பற்றியும் ஆராயப்பட்டது.

இதன் மூலம் கிடைத்த தரவுகள் சமாதானத்தை நோக்கிய வீதியில் (on the road to peace) எனும் கையேட்டில் வெளியிடப்பட்டுள்ளது. இந்த தரவுகள் இலங்கையில் பத்திரிகையாளர்கள் எவ்வாறு செயற்படுகின்றனர் என்பது குறித்த ஆழமான பார்வைக்கு உதவுகின்றன.

அடிப்படைப் பிரச்சினைகளாக உள்ளவை :

- போதிய வளங்கள் இன்மை
- பக்கச் சார்பான நம்பகத்தன்மையற்ற செய்தி மூலங்கள். குறிப்பாக அரச தரப்பிலிருந்து
- தகவல் பெறுவதற்கான மொழித் தடை, மேலும் ஊடக நிறுவனங்களில் இனங்கள் சரியாக பிரதிநிதித்துவப் படுத்தப்படாமை.

இன மோதல்கள் மற்றும் சமாதான முயற்சிகள் பற்றி செய்திகளும் ஒரு பக்கச் சார்புடவையாக உள்ளஉன. ஒரு செய்தி மூலங்களை அடிப்படையாகக் கொண்டவையாகவும் பதற்றத்தை அதிகரிக்க கூடியனவாகவும் உள்ளன.

சிங்கள, தமிழ் செய்தித் தாள்களில் இதனை காணக் கூடியதாகவுள்ளது. இவை தங்களுடைய வாசகர்களுக்கு வேறு வேறு விதமான செய்திகளை அளிக்கின்றன.

**சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனம்**

**INTERNATIONAL FEDERATION OF JOURNALISTS**

IFJ Asia - Pacific

245 Chalmers Street , Redfern, Sydney NSW 2016, Australia

Email : ifj@ifj_asia.org Website : www.ifj.org